Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 255/2017 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW7 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | தங்கராஜ் |
| Father's Name | – | |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 19th June 2023.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Accused absent. 317 Petition filed and allowed.

**முதல் விசாரணை** :

நான் தற்போது பொள்ளாச்சி நகர கிழக்கு காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் கடந்த 20.11.2017 ம் வருடம் பொள்ளாச்சி தாலூக்கா காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது, பொள்ளாச்சி அருண் மருத்துவமனையில் இருந்துகிடைத்த தகவலின் படி அருண் மருத்துவமனை சென்று, அங்கு சிகிச்சையில் இருந்த மோகனப்பிரியா வயது 25, என்பவரிடம் வாக்குமூல புகாரினை பெற்று புகாரின் தன்மையை அறிந்து 18.00 மணிக்கு நிலையம் வந்து மேற்படி மோகனப்பிரியா கொடுத்த புகாரின் படி நிலையக்குற்ற எண். 233/2017 இதச பிரிவுகள் 279, 337 கீழ் வழக்கு பதிவு செய்து, அச்சு முதல் தகவல் அறிக்கையும், புகாரினையும் இணைத்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன்.

ஒரு நகலை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே 19.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் விஜயகுமார், சங்கரராமன் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன்.

பின்னர் சாட்சிகள் மோகனப்பிரியா, நாகராஜ், சந்தோஷ், பழனிச்சாமி, சுதாகர், விஜயகுமார், சங்கர்ராமன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வழக்கில் காயம்பட்ட மற்றொரு சாட்சியான மகாலிங்கம் என்பவர் கோவை ராமகிருஷ்ணா மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தது தெரிந்து நிலையம் வந்து, 21.10 மணிக்கு கோவை ராமகிருஷ்ணா மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த மகாலிங்கம் என்பவர் இறந்துவிட்டப்படியால் மருத்துவமனையில் கிடைத்த தகவலின் படி வழக்கின் சட்டப்பிரிவை இதச பிரிவுகள் 279, 337 லிருந்து இதச பிரிவுகள் 279, 337, 304A ஆக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்தற்கு அனுப்பி வைத்தேன்.

வழக்கில் ஆய்வாளர் அவர்கள் வெளி அலுவலில் இருந்ததால் அவரது உத்தரவின் படி வழக்கினை மேல்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு இரவு நேரம் என்பதால் இறந்துபோன மகாலிங்கம் பிரேத விசாரணையின் பொருட்டு தகவல் கொடுத்துவிட்டு, 21.11.2017 ம் தேதி காலை 08.00 மணிக்கு கோவை ராமகிருஷ்ணா மருத்துவமனை சென்று, மகாலிங்கம் அவர்களின் பிரேதத்தினை சரவணக்குமார் என்பவர் அடையாளம் காட்ட பஞ்சாயத்தார் முன்பு பிரேத விசாரணை செய்தேன்.

சாட்சிகள் சரவணக்குமார், தமிழரசி, ராசாமணி, சிவசுப்பிரமணியம், அருண்குமார் ஆகியோரை பிரேத விசாரணை சாட்சிகளாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இறப்பின் மருத்துவ ரீதியான காரணம் அறிய மருத்துவ பிரேத பரிசோதனைக்கு காலை 11.00 மணிக்கு தலைமைக் காவலர் 1697 அழகிரிசாமி பொள்ளாச்சி அரசு மருத்துவமனை மருத்துவர் முன்னிலையில் மருத்துவ பிரேத பரிசோதனைக்கு உட்படுத்த அனுப்பி வைத்தேன். பின்னர் பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன்.

பின்னர் இறந்துபோன மகாலிங்கத்தின் பிரேதத்தினை அவரது உறவினரிடம் ஒப்படைத்தேன். என்னுடைய விசாரணை முடித்து மேல் விசாரணைக்காக ஆய்வாளர் வசம் வழக்கினை ஒப்படைத்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

அந்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.3** ஆகவும், அந்த பிரேத விசாரணை அறிக்கை **அ.சா.ஆ.4** ஆகவும், மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.5** ஆகவும், அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ.6** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் பகுதி வளைவான பகுதி என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் வளைவான பகுதி சுமார் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 50 அடி தூரம் இருக்கும். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் பகுதி வளைவான பகுதியில் தான் நடந்துள்ளது என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சம்பவ இடத்தில் சரவணா ஸ்டோர், பேக்கரி, மினி பஸ் நிறுத்தம் உள்ளது என்றால் சரிதான். மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதி என்றால் சரிதான். இறந்துபோன நபரின் உறவினர்களை சாட்சியாக விசாரித்துள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சாலை ஒரு குறுகலான சாலை என்றால் சரியல்ல, 16 அடி பாதை ஆகும், அதில் இரண்டு வாகனங்கள்செல்லலாம்.

பிரேத விசாரணை சாட்சிகளை விசாரிக்க உங்களுக்கு அதிகாரம் இல்லை என்றால் உத்தரவிப்படி விசாரித்தேன். இறந்துபோன நபரின் அஜாக்கிரதையால் ஏற்பட்ட விபத்திற்கு, எதிரியின் மீது பொய்யான புகாரினை பெற்று, சம்பவயிடத்திற்கு செல்லாமல், பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் ஆகியவற்றை காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, எதிரிக்கும்

இவ்வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

சாட்சி மோகனப்பிரியாவை மருத்துவமனையில் வைத்து விசாரித்தேன், மற்ற சாட்சிகளை சம்பவயிடத்தில் வைத்து விசாரித்தேன் என்றால் சரிதான். சம்பவயிடத்திற்கு நான் செல்லும்போது விபத்தில் ஈடுபட்ட வாகனங்கள் சம்பவயிடத்தில் இல்லை.

**மறுவிசாரணை**- இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

**(Sd/. Thiru. E. Pragasam B.A.,B.L.,)**

Judicial Magistrate No. II,
Pollachi.